**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE SPECIAL SUB JUDGE,**
**TO DEAL WITH MCOP CASES, TIRUVANNAMALAI.**
**M.C.O.P.No: 426 /2024**
**Deposition of Witness for: P.W.1**

| | | |
|---|---|---|
| Name | : | அருள்பிரியா |
| Husband Name | : | ஜானகிராமன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of : 09.06.2025.

**முதல் விசாரணை தொடர்ச்சி**

**நான்** இந்த மனுவில் 1ம் மனுதாரர். 2 முதல் 4 மனுதாரர்கள் என் மகன்கள். 5, 6 மனுதாரர்கள் என்னுடைய மாமனார் மற்றும் மாமியார். அசல் மனு தொடர்பாக என்னுடைய முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். என் வழக்கறிஞர் படித்து காட்ட தெரிந்து கொண்டேன். என் தரப்பின் வழக்கினை நிருபிக்கும் வகையில் பின்வரும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. விபத்து சம்மந்தமாக திருக்கோவிலூர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட குற்ற எண்:677/2023 ன் முதல் தகவல் அறிக்கை கணினி நகல் **ம.சா.ஆ.1**.
2. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் **ம.சா.ஆ.2.**
3. இறந்துபோன ஜானகி ராமனின் பிரேத பரிசோதனை அறிக்கை நகல் **ம.சா.ஆ.3**.
4. ஜானகிராமனின் ஓட்டுநர் உரிமம் அசல் **ம.சா.ஆ.4.**
5. ஜானகிராமனின் இறப்பு சான்று நகல் **ம.சா.ஆ.5.**
6. ஜானகிராமனின் வாரிசு சான்று நகல் **ம.சா.ஆ.6.**

(மேற்படி 1, 2, 3, 5,6 ஆகிய ஆவணங்கள் நகல்கள் என்பதாலும் பாரதிய சாக்ஷிய அதிநியமம் பிரிவு 65பி ன் கீழ் சான்றிதழ் இல்லாததால் அவற்றை குறியீடு செய்ய 2ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் ஆட்சேபித்தனின் பேரில் அவரின் ஆட்சேபனைக்குட்பட்டு மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன. )

மனுப்படி உத்திரவாக வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வழக்கு விபத்து சம்பந்தமாக என் ஊரை சேர்ந்த ஜெகதீசன் என்பவர் தகவல் தெரிவித்தார். அப்போது மதியம் சுமார் 1.30 மணி இருக்கும். தகவல் கேள்விப்பட்ட பின்னர் நான் மருத்துவமனை சென்றேன். என் ஊரிலிருந்து மருத்துவமனை சுமார் 10 கி.மீ தொலைவில் உள்ளது. நான் மருத்துவமனைக்கு மதியம் 2.00 மணிக்கு மேல் சென்றேன். விபத்து எவ்விதம் நிகழ்ந்து என்று நான் மருத்துவரிடம் தெரிவிக்கவில்லை. என் ஊர்க்காரர் ஜெகதீசன் என்பவர் தெரிவித்தார். அவர் தான் என் தரப்பில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க இன்று நீதிமன்றம் வந்துள்ளார். மருத்துவரிடம் விபத்து சமயத்தில் இரண்டு இருசக்கர வாகனங்கள் மோதி விபத்து நிகழ்ந்ததாக தெரிவித்தாரா என்றால் கனரக வாகனம் ஒன்று என் கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதியதாக ஜெகதீசன் தெரிவித்தார். மருத்துவமனையில் என் கணவருக்கு சிகிச்சை அளித்தனர். அதன்பின்னர் மருத்துவர் என் கணவர் இறந்துவிட்டதாக தெரிவித்தார். போலிசார் விபத்து சம்பந்தமாக மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். நான் சொன்ன விவரங்களை போலிசார் எழுதி படித்து காண்பித்து என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியும். ஆங்கிலம் ஓரளவிற்கு படிக்க தெரியும். நான் விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் எழுத்துமூலம் கொடுத்தேன். போலிசார் என்னை விசாரித்த பின்னர் அந்த புகாரை கொடுத்தேன். நான் புகார் கொடுத்த சமயத்தில் கனரக வாகனம் எது என்றும் அதன் உரிமையாளர் யார் என்றும் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. விபத்து சமயத்தில் என் கணவர் ஓட்டிச்சென்ற வாகனம் Hero honda splendor plus விபத்தில் சம்பந்தப்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள மற்றொரு இருசக்கர வாகனம் Hero honda passion pro என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகம் இல்லை. TN16H0813 என்பது கனரக வாகனம் என்று எனக்கு எப்போது தெரியும் என்றால விபத்திற்கு மறுநாள் எனக்கு தெரியும். Hero honda passion pro என்ற வாகனத்தின் உரிமையாளரையும் ஓட்டுநரையும் காப்பீட்டு நிறுவனத்தை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் அவர்களை எங்கள் தரப்பில் சாட்சியாக விசாரிக்கபோவதில்லை. நான் கொடுத்த புகாரிலும், வாக்குமூலத்திலும் கனரக வாகனம் எது என்று தெரியவில்லை என்று தான் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரித்த போதே மற்ற சாட்சிகளையும் விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தனர். விபத்து சமயத்தில் என் கணவர் ஓட்டிச்சென்ற Hero honda splendor plus என் கணவருக்கு சொந்தமானது என்று புகாரிலும் வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளேன் என்றால் அதுபற்றி ஞாபகம் இல்லை. Hero honda splendor plus வாகனத்தின் MVI report இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவரின் ஓட்டுநர் உரிமத்தை விபத்திற்கு பின்னிட்டு பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.6 வரையான ஆவணங்களை எனக்கு யார் வாங்கிக்கொடுத்தார்கள் என்றால் என் மாமனாரும் என் கொழுந்தனாரும் வாங்கிக்கொடுத்தார்கள். அவற்றின் அசல் ஆவணங்கள் யாரிடம் உள்ளது என்றால்

அதுபற்றி ஞாபகம் இல்லை. வழக்கு விபத்து சம்பந்தமாக நான் வேறு நீதிமன்றம் எதிலும் சாட்சியம் அளிக்கவில்லை. என் கணவருக்கு மது அருந்தும் பழக்கம் எவ்வளவு வருடங்களாக உள்ளது என்றால் அவருக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. ம.சா.ஆ.3 பிரேத பரிசோதனை அறிக்கையில் என்ன இறுதி கருத்துரை வழங்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. ம.சா.ஆ.3ல் கருத்துரையில் விபத்திற்கு முன்பு இறந்தவர் மது அருந்தியுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு. ம.சா.ஆ.3 தொடர்புடைய மருத்துவ அதிகாரிகள், காவல் துறையினர் ஆகியோரை சாட்சிகளாக விசாரிக்கபோகிறோமா என்றால் வழக்கறிஞரை கேட்டு தேவையெனில் விசாரிப்போம். விபத்து சம்பந்தமான குற்ற வழக்கு என்னவானது என்று நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதற்கு குறிப்பிட்ட காரணம் எதுவும் என்னால் சொல்ல இயலாது. நான் தாக்கல்செய்துள்ள நகல் ஆவணங்களின் அடிப்படையில் நாங்கள் கோரியுள்ள பாரிகாரத்தை நீதிமன்றம் வழங்கமுடியாது என்றும் இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றும் சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க என் தரப்பு சாட்சியான ஜெகதீசனுக்கு படிப் பணம் வழங்கினோமா என்றால் இல்லை. எங்களுக்கு ஆதரவாக அவர் வந்துள்ளார் என்றால் விபத்தை நேரில் பார்த்ததால் அவர் சாட்சியம் அளிக்க வந்துள்ளார். விபத்தை எத்தனை நபர்கள் நேரில் பார்த்திருப்பார்கள் என்று எனக்கு தெரியாது. விபத்து எவ்விதம் நிகழ்ந்தது என்றும் யார் காரணம் என்றும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என் கணவர் ஓட்டுநராக யாரிடம் வேலை செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சாலை விதிகளை பற்றி எனக்கு தெரியும். சாலையின் இடது புறமாக செல்லவேண்டும். செல்போன் பேசிக்கொண்டு செல்லக்கூடாது, குறிப்பிட்ட இடைவெளி விட்டு செல்லவேண்டும், பச்சை மஞ்சள் சிகப்பு மின்விளக்குகளை கவனித்து செல்லவேண்டும், மிதமான வேகத்தில் செல்லவேண்டும். என் கணவரின் கரும காரியத்திற்கு ரூ.1,00,000 செலவழித்ததாக தெரிவித்துள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் பிள்ளைகளுக்கென்று சேமிப்பு எதுவும் செய்யவில்லை. என் கணவர் சம்பாதிப்பதை கையில் பெற்றுவந்து தருவார். என் கணவர் வருமான வரி எதுவும் செலுத்தவில்லை. விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனம் ஒரே திசையில் சென்றதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஜெகதீசனையும் மருத்துவமனையில் வைத்து போலிசார் விசாரித்தார்கள். என் கணவர் மது போதையில் வாகனத்தை ஓட்டிச்சென்று தன்னிச்சையாக விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. என் கணவரின் தொழில் மற்றும் வருமானத்தை நிருபிக்கும் வகையில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் மது அருந்தாமல் விபத்தின் காரணமாகத்தான் என் கணவர் இறந்தார் என்பதை நிருபிக்கும் வகையில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போன்று நிகழவில்லை என்றும் என் கணவரின் அஜாக்கிரதையால் தான் விபத்து நிகழ்ந்தது என்றும் 2ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் விபத்தில் சம்பந்தப்படவில்லை என்றும் விபத்தில்

சம்பந்தப்பட்ட மற்றோரு இருசக்கர வாகனத்திற்கும் என் கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கும் காப்பீடு சான்று இல்லாததால் காப்பீடு செய்யப்பட்ட 1ம் எதிர்மனுதாரர் கனரக வாகனத்தின் மீது பொய்யான விவரங்களை தெரிவித்து இழப்பீடு பெறுவதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் எங்களுடன் வஞ்ச கூட்டாக சேர்ந்திருப்பதால் இவ்வழக்கை நடத்த முன்வரவில்லை என்றால் சரியல்ல. நானும் என் பிள்ளைகளும் என் மாமனார், மாமியாருடன் தான் வசிக்கிறோம். என் மாமனார் வேலைக்கு சென்று சம்பாதிக்கிறார் என்றால் சரியல்ல. அவர் வேலை இன்றி வீட்டில் தான் உள்ளார். என் கணவரை சார்ந்து என் மாமியாரோ மாமனாரோ வாழவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யான விவரங்களை தெரிவித்துள்ளோம் என்றால் சரியல்ல. எனக்கும் என் மாமனார், மாமியாருக்கும் குடும்ப அட்டைகள் தனியாக உள்ளன என்றால் சரிதான். அதனால் 2ம் எதிர்மனுதார் எங்களுக்கு இழப்பீடு எதுவும் கொடுக்க தேவையில்லை என்றும் 1ம் எதிர்மனுதாரரும் மற்றொரு இருசக்கர வாகன உரிமையாளரும் தான் எங்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றும் சொன்னால் சரியல்ல. விபத்து நிகழ்ந்து 6 மாத காலத்திற்குள் இவ்வழக்கை தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரிபார்க்கப்பட்டது.**

ஒப்பம்/–திருமதி.ஆர்.கற்பகவள்ளி

**சிறப்பு சார்பு நீதிபதி,**

**(மோட்டார் வாகன விபத்து வழக்குகள்),**

**திருவண்ணாமலை.**